*1971 அக்டோபர் 22]*

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த யோசனை பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளர்களுக்குப் பாதகமாக அமையும். அவர்களுக்குத்தான் முதலிடம் அளிக்க வேண்டும். ஆகவே அவர்களுக்கு விலைவாய்ப்பு கொடுக்க வேண்டும். கரும்பு விலையை எப்படி நிர்ணயிக்கவேண்டுமென்று விதி இருக்கிறது. அதன்படி நிர்ணயிக்கிறார்கள்.

## மன்னியாற்றுப் பாசனம்

* 24 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாயூரம், மணல்மேடு பகுதியிலுள்ள மன்னியாற்றுப் பாசனத்தைப் பராமரிப்பு செய்ய அரசுக்கு உத்தேசம் ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** உண்டு. மன்னியாற்றின் கடைமடைப் பாசனத்தில் தண்ணீர் பற்றாக்குறை இருப்பதால் கொள்ளிடம் கீழ் அணையிலிருந்து பிரியும் குமிக்கி மன்னியாற்றில் அதிக நீர் விடப்பட்டு மன்னியாற்றின் கடைமடைப் பகுதிக்கு அனுப்பப்படுகிறது. இதனால் மன்னியாற்றின் கடைமடைப் பாசனம் இப்போது பாதிக்கப்படாமல் இருக்கிறது.

## கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே அணை

* 25 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அணைக்கரைக்குக் கீழே கொள்ளிடம் ஆற்றில் மழைக்காலங்களிலும் வெள்ளக் காலங்களிலும் சேதமாகும் தண்ணீரை ஒரு அணை கட்டி அதன் மூலம் விவசாயத்திற்கு பயன்படுத்த ஏதேனும் திட்டம் அரசு பரிசிலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இல்லை.

## ஓட்டப்பிடாரத்தில் விவசாய ஆராய்ச்சிப் பண்ணை

* 26 வினா.—திரு. எம். முத்தையா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஓட்டப்பிடாரம், சாலிகுளத்தில் தமிழ்நாடு அரசின் விவசாய ஆராய்ச்சிப் பண்ணை ஆரம்பிக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) ஓட்டப்பிடாரம், சாலிகுளத்தில் விவசாய ஆராய்ச்சிப் பண்ணை அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசிலனையில் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. எம். முத்தையா :** தலைவரவர்களே, ஒட்டப்பிடாரம், சாலிகுளத்தில் ஆராய்ச்சிப் பண்ணை நிறுவ வேண்டுமென்று அங்கு ஒரு ஆராய்ச்சி நடத்தப்பட்டதே, அது தற்சமயம் என்ன ஆனது என்பது என் கேள்வி. இதில் எப்படியோ மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம் ஒட்டப்பிடாரத்திற்கு அண்மையிலுள்ள சாலிகுளத்தில் ஒதுக்கக் காட்டுப் பகுதியில் இந்திய அரசு பண்ணைக் கழகம் பெரிய அளவில் தொடங்கும் செயற்குறிப்பு இருந்தது. ஆனல் பரிசோதனை செய்த பிறகு அங்கு துளைக் கிணறுகள் வெட்டிய இடங்களில் போதிய நீர் கிடைக்காததால் இந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** தமிழ் நாட்டில் புதிய நெல் விதைகளை தயாரிக்க அரசு என்ன முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மாவட்டங்களிலுள்ள பல்வேறு ஆராய்ச்சிப் பண்ணைகளில் அப்படிப்பட்ட திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. வேளாண்மைத் துறையின் ஆளுகையின்கீழ் 73 ஆராய்ச்சி நிலையங்கள் உள்ளன. அவற்றுள் மூன்று விவசாயப் பணியாளர்களைக் கொண்டு கோவில்பட்டி, ஆடுதுறை, திண்டிவனம் ஆகிய இடங்களில் வட்டார ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இம்மாநிலத்தை வெவ்வேறு பகுதிகளாக, வேளாண்மை, தட்ப வெப்ப நிலைமைகளுக்கேற்ப இந்த நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. முக்கியமாக உள்ளூர் பகுதிகள் குறித்து சோதனைகள் நடைபெற்று வருகின்றன. வேளாண்மைப் பிரச்சினையை மையமாகக் கொண்டு இடத்திற்கு ஏற்ப இந்த ஆராய்ச்சி அந்தந்த வட்டாரத்திற்குப் பயன்படும் முறையில் நடைபெற்று வருகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** வட ஆற்காடு மாவட்டத்தில் சமீபத்தில் ஒரு பெரிய பண்ணையை மத்திய அரசாங்கம் ஆரம்பித்திருக்கிறது. தண்ணீர் இல்லாத அந்தப் பகுதியில் ஆரம்பித்திருப்பது போல் நீர்வளம் மிகுந்த தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அண்மையில் வட ஆற்காடு மாவட்டத்தில் செங்கத்தில் துவக்கப்பட்டிருக்கும் பண்ணை எல்லாவிதமான ஆராய்ச்சிகளும் செய்யப்பட்ட பிறகு தான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அங்கு நீர் வளமும் நில வளமும் இருப்பதோடு அந்தப் பகுதி உழவர்களுக்கு நல்ல மன வளமும் இருக்கிறது. அந்தப் பண்ணை சிறப்பாக இருக்கிறது என்ற காரணத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு செயல்படத் துவங்கி இருக்கிறது. தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் ஏற்கனவே இருக்கிறது.

1971 அக்டோபர் 22]

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, there is an Agricultural Farm in the Hosur Cattle Farm and conditions are very ideal there. May I know from the Hon. Minister whether he will provide more funds to see that the Farm becomes an ideal farm for the entire State?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தற்சமயம் அப்படி ஒன்றும் யோசனை இல்லை.

**தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் விதைப்பண்ணைகள்**

* 27.வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களைச் சேர்ந்த, தீவிரச் சாகுபடித் திட்டம் உள்ள எல்லா ஒன்றியப் பகுதிகளிலும் அதற்குத் தேவையான முழு அளவில் நல்ல விதைகளை உற்பத்தி செய்வதற்குள்ள விதைப் பண்ணைகள் அமைக்க எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஆதார வித்துக்கள் உற்பத்தி செய்ய தஞ்சை மாவட்டத்தில் 14 அரசு விதைப் பண்ணைகளும் குடுமியாமலையில் உள்ள 'அன்னு பண்ணை" உட்பட திருச்சி மாவட்டத்தில் 7 விதைப் பண்ணைகளும் உள்ளன. இவற்றின் மொத்தப் பரப்பளவு 2,174.17 ஏக்கர். இந்த மாவட்டங்களுக்குத் தேவையான அளவுக்கு நல்ல ஆதார வித்துக்கள் கையிருப்பில் தற்போது உள்ளது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : இப்போது அரசாங்க விதைப் பண்ணைகள் மூலமாகவும், தனியார் விதைப் பண்ணைகள் மூலமாகவும் தரப்படும் விதைகள் சரியான முறையில் பாதுகாத்து வைக்கப்படாத காரணத்தால் விதைகள் முளைப்பது குறைவாக இருக்கிறது. ஆகவே, விதைகள் முளைக்கும் தன்மை அதிக விகிதாசாரம் இருக்கும் முறையில் புதிய முறைகளைக் கையாள அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : முதல் ஆதார வித்துக்களும், அடுத்து இரண்டாவது ரக வித்துக்களும் இப்போது தயார் செய்யப்பட்டு வருகிறது. அவை போதிய அளவு நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கின்றன. அப்படி சந்தேகப் படுகிற இடங்களில் விவசாய அதிகாரிகள் அந்த விதைகள் முளைக்கின்றனவா என்று சோதனை செய்து அதற்குப் பிறகு விவசாயிகளுக்குக் கொடுக்கும் திட்டமும் இருக்கிறது. அதுமாத்திரமல்லாமல் இப்போது எல்லா விதைகளுமே பரிசோதனை செய்யப்பட்டு நூற்றுக்கு இவ்வளவு சதவிகிதம் முளைக்கிறது என்ற அத்தாட்சி பெற்ற பிறகுதான் கொடுக்க வேண்டுமென்ற திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.